
# திராவிடத்தால் வாழ்கிறோம்

784

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாணவர்களை அலைக்கழிக்கும் அவலம்!

ரயில்வே தேர்வு வாரியத்தால் 'லோகோ பைலட்' பணியிடங்களுக்கு மார்ச் 19-ஆம் தேதி தேர்வு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் 6,000 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், 1,000 கிமீ, 1,500 கிமீ-க்கு அப்பால் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், எதிர்ப்புகளை அலட்சியப்படுத்தியது ரயில்வே தேர்வு வாரியம்.

தடைகளை மீறி, 1,000 கிலோ மீட்டருக்கும் மேல் பயணம் செய்து, தமிழ்நாட்டு மாணவர்கள் தேர்வெழுதச் சென்றனர். ஆனால், கடைசி நேரத்தில் தொழில்நுட்பக் காரணங்களால் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக ரயில்வே தேர்வு வாரியம் அறிவித்தது. இது, ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால், தேர்வெழுதச் சென்ற மாணவர்களைக் கொந்தளிக்கச் செய்திருக்கிறது.

அந்தந்த மாநில மாணவர்களுக்கு அந்தந்த மாநிலங்களில் தேர்வு மையங்கள் அமைக்காமல் அலைக்கழித்ததே பெரும் அலட்சியமான செயல் என்றால், தொழில்நுட்ப ஏற்பாடுகளைக் கூட முறையாகச் செய்யாதது, அதைவிட பெரிய அலட்சியம். தமிழ்நாட்டில் இருந்து வெளிமாநிலங்களுக்குச் சென்ற மாணவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதற்கான காரணம் குறித்து, விரிவான விசாரணை நடத்த வேண்டுமென்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஏற்கெனவே நீட் தேர்விற்கும் இதுபோல வெளிமாநிலங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பிய பின்னரே, தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டன. ரயில்வே தேர்வாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் தேர்வாக இருந்தாலும் சரி, மாணவர்களின் மனநிலையைச் சீர்குலைக்கும் வகையில், இதுபோல தேர்வு மையங்கள் அமைக்கும் போக்கை, ஒன்றிய அரசும் அதன் துறைகளும் இனி வரும் காலங்களிலாவது கைவிட வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்





மரகதம் மருதநாயகம்

### 'தளபதி அவர்களுடன் என் கணவர்!'

1994-இல் கழகத்தில் சிறுபிளவு ஏற்பட்டபோது, கழக வளர்ச்சிக்காக தமிழ்நாடு முழுவதும் சுற்றிவந்தார், அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். கரூர் மாவட்ட பயணத்தின்போது, உப்பிடமங்கலம் பேரூர் கழகச் செயலாளராக இருந்த என் கணவர் சு.மருதநாயகம் அவர்கள், அங்கு கழகக் கொடியேற்றும் நிகழ்வுகளுக்கும், சிறப்பான பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்தார். அதற்காக தளபதி அவர்களிடம் பாராட்டுக் கடிதமும் பெற்றார். அந்தக் கூட்டத்தில் தளபதி அவர்களுடன் என் கணவர் எடுத்துக்கொண்ட சிறப்புமிக்க புகைப்படம். அவர் நினைவுகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

– மரகதம் மருதநாயகம்,
உப்பிடமங்கலம், கரூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வகுப்புவாரிப் பணியமர்த்தல்!

1926-1930-ஆம் ஆண்டுகளில் நீதிக்கட்சியின் ஆதரவில், அமைச்சரவை அமைத்திருந்த பி.சுப்பராயனின் அமைச்சரவையில், இடம்பெற்றிருந்த இரண்டாவது அமைச்சரான எஸ்.முத்தையா, தனது துறையில் வகுப்புவாரிப் பணியமர்த்தலைத் தொடங்கிவைத்தார். "இதுபோலவே மற்ற இலாக்காக்களுக்கும் ஒரு விதி ஏற்பட்டு விடுமானால், நமது நாட்டைப் பிடித்த கேட்டில் பெரும் பாகம் தொலைய மார்க்கமேற்பட்டு விட்டதென்றே சொல்லுவோம்" என அந்த மாற்றத்தை வரவேற்றார் பெரியார்.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

3

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# 'பூந்தோட்டம்' என்னும் பகுத்தறிவுத் தோட்டம்!

நடிகை மனோரமா படப்பிடிப்புக்கு எங்கு சென்றாலும், காலையில் அருகே இருக்கும் கோயிலுக்குச் செல்வது வழக்கம். ஆனால், ஒரு கிராமத்தில் 2, 3 மணி நேரமாய்ச் சுற்றியும் கோயில் தென்படவில்லை. 'ஏன், இந்த ஊரில் கோயில் இல்லை' என ஆச்சர்யத்துடன், அந்த ஊர் தலைவரிடம் விசாரித்தார்.

அதற்கு அந்த ஊர் தலைவர், "எங்கள் ஊரில் முன்பு கோயில் இருந்தது. பெரியார் ஒருமுறை எங்கள் ஊருக்கு வந்தார். 'இந்த ஊர்ல இத்தன கோயில் இருக்கே? எத்தனை பள்ளிக்கூடம் இருக்கு? எவ்வளவு தற்குறியாவும், கைநாட்டுப் பசங்களாகவும் திரியறீங்க? பொம்பளங்கள, புள்ளை பெக்குற மெஷினாட்டம் வச்சிருக்கீங்க! பெண்களைப் படிக்க வச்சிங்கன்னா மொத்த சமுதாயத்தையும் காப்பாத்துவாங்க' என்று பேசினார். உடனே கோயில்கள் எல்லாம் பள்ளிகளாக மாறிவிட்டன. இப்போது வீட்டுக்கு ஒரு குழந்தையை ஆசிரியருக்குப் படிக்க வைக்கிறோம். அதுவும் பெண் குழந்தையை" என்று கூறியுள்ளார்.

தினமணியின் மகளிர் மலர் ஒன்றில் ஒருமுறை மனோரமா அளித்த நேர்காணலில் சொன்ன தகவல் இது. மனோரமா சொன்ன அந்த ஊர், கடலூர் மாவட்டம், சிதம்பரத்திற்கு அருகே உள்ள பூந்தோட்டம் கிராமம்.

மனோரமா கூறியதுபோல, 1945-ஆம் ஆண்டில் பெரியாரும், அண்ணாவும் பூந்தோட்டம் கிராமத்திற்குச் சென்றுள்ளனர். அதுகுறித்து, 'பூந்தோட்டத்தில் ஒரு நாள்' என அண்ணா 'திராவிட நாடு' இதழில் பதிவு செய்துள்ளார். மீண்டும் 1956, 57-இல் சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைக்க பூந்தோட்டம் கிராமத்திற்கு பெரியார் சென்றார். அப்போது அந்த ஊரில் எல்லா வீடுகளிலும் பெரியார் படம் இருந்தது. 1960-களில் 30-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கு உருவாகிவிட்டனர். அவ்வூரின் மக்கள்தொகையே இன்றும் சராசரியாக 500 பேர்தான். இப்போதும் அங்கு கோயில் இல்லை, சுயமரியாதைத் திருமணங்கள் தொடர்ந்து நடக்கின்றன. கல்விக்கு முக்கியத்துவம் தருவதும் இப்போதும் தொடர்கின்றது..

...பயணிப்போம்.



"நான் 8-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரில் குளங்களைத் தூர்வாரினார்கள். அப்போது உள்ளே கடவுள் சிலைகள் இருந்தன. ஆர்வமாக நாங்கள் விசாரித்தபோது, பெரியார் தாக்கத்தால் கோயில்களை அகற்றியபோது, சிலைகளை ஊர் மக்களே குளங்களில் வீசியது தெரியவந்தது. எங்கள் தலைமை ஆசிரியருக்கே பெரியார்தான் இங்கு வந்து சுயமரியாதைத் திருமணம் செய்துவைத்தார். பெரியாரால்தான் எங்கள் ஊர் கல்வியில் முன்னேறியது. அவருடைய தாக்கம் இன்னும் எங்கள் ஊரில் இருக்கிறது"

**வழக்கறிஞர் பாண்டியராஜன்,**
கடலூர் தெற்கு மாவட்டச் செயலாளர்,
அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்.

"எஸ்.எஸ்.ராஜேந்திரன் நாடகக் குழுவில் இருந்த கலைமாமணி பி.எஸ்.தட்சிணாமூர்த்தி குழுவில் நடிக்கவே மனோரமா இங்கு வந்தார். பெரியார், அண்ணா மட்டுமல்ல கலைஞர், பேராசிரியர், நாவலர், மதியழகன் போன்றோரும் 'பூந்தோட்டம்' வந்துள்ளனர். இப்போது 3-வது தலைமுறை மாறிவிட்டது, அதற்கேற்ப மாற்றங்களும் ஏற்பட்டுவிட்டன. ஆனால், பெரியாரின் சுவடுகள் இன்னும் தொடர்கின்றன."

பேராசிரியர் **பூ.சி.இளங்கோவன்,**
சிதம்பரம் மாவட்டத் தலைவர்,
திராவிடர் கழகம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

54

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# சபாநாயகரின் அதிகாரத்தில் அத்துமீறும் அ.தி.மு.க.!



***ச*ட்டமன்றத்தில் பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களிடம் பாரபட்சமாக நடந்துகொள்வதாகவும், மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்கு அ.தி.மு.க.வுக்கு உரிய வாய்ப்பளிப்பதில்லை என்றும் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டுகிறாரே?.**

சபாநாயகரைப் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என பழனிசாமி சார்பில், அ.தி.மு.க. கொண்டு வந்த தீர்மானம் படுதோல்வி அடைந்துவிட்டது. அந்த விரக்தியில் அவர் வன்மத்தைக் கக்கியிருக்கிறார். சட்டமன்ற ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிய சபாநாயகர்கள் யார் என்று பார்த்தால், அவை அ.தி.மு.க. ஆட்சிக்காலத்து சபாநாயகர்களின் பெயர்களாகவே இருக்கும். அரசியல் சட்ட நகல் எரிப்புக்காக இனமானப் பேராசிரியர் பெருந்தகை உள்ளிட்ட தி.மு.க.வின் 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிப் பறிப்பு, 'ஆனந்தவிகடன்', 'வணிக ஒற்றுமை' ஆகிய பத்திரிகை ஆசிரியர்களுக்கு சிறைத் தண்டனை விதிப்பு, 'முரசொலி'யின் குரல்வளையை நெரிக்கவேண்டும் என்ற வன்மத்துடன் சட்டமன்றத்திற்குள்ளேயே விசாரணைக் கூண்டைக் கொண்டு வந்து, அதில் 'முரசொலி' ஆசிரியர் செல்வத்தை நிறுத்தி விசாரித்தது, 'தி இந்து' நாளேடு-'நக்கீரன்' வார இதழ் உள்ளிட்ட பத்திரிகைகளுக்கு எதிரான உரிமை மீறல் பிரச்சினையின் அடிப்படையில், சபாநாயகர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள். இவை அனைத்தும் அ.தி.மு.க. ஆட்சிக்காலங்களில் நடந்தவை. அந்த அ.தி.மு.க. ஜா-ஜெ என பிரிந்தபோது, ஜானகி அம்மையாரின் ஆட்சியைக் கவிழ்க்க ஜெயலலிதா ஆதரவு எம்.எல்.ஏக்கள் சட்டமன்றத்தில் ரகளை செய்து, சபாநாயகரின் மடியிலேயே போய் உட்கார்ந்ததை, அந்த சபாநாயகரே கோபமும் வருத்தமுமாக வெளிப்படுத்திய வரலாறும் உண்டு.

2021-ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரை, அவையில் உள்ள அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப பேசுவதற்கான நேரத்தை வழங்கி வருகிறார், பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள்.

முதன்மை எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் உறுப்பினர்களுக்கு ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுவதற்கு 12 மணி 26 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதாவது, பேரவையில் தற்போது அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை 28%. அவர்கள் பேசுவதற்கு வழங்கப்பட்ட நேரம் 49.05%. இதுபோலவே, பட்ஜெட் மீதான விவாதத்தில் 11 மணி 5 நிமிடங்கள் (33.04%) பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 68 நாட்கள் நடைபெற்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் 44 மணி 58 நிமிடங்கள் (28.61%) ஒதுக்கப்பட்டு உரையாற்றியுள்ளனர்.

> "எந்த வகையிலும் அவர்களுடைய எண்ணிக்கைக்குக் குறைவான அளவில் நேரம் ஒதுக்கப்படவில்லை."

எந்த வகையிலும் அவர்களுடைய எண்ணிக்கைக்குக் குறைவான அளவில் நேரம் ஒதுக்கப்படவில்லை. மக்கள் பிரச்சினையைப் பேச வாய்ப்பளிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார் என்றால், ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் மக்கள் பிரச்சினைக்கு மாறாக எதைப் பேசிக் கொண்டிருந்தார்கள்?

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131